# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.T. C. No. 227/2025** |
| Prosecution witness | : | P.W. 3 |
| List of witness | : | L.W.2 |
| Name | : | சங்கரன் |
| Father's /Husband Name | : | முருகையா |
| Village | : | செருகளத்தூர் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 57 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 17th day of April 2026.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து ஊர்க்காரர் ஆவார். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். அவர் எனது தம்பியின் மனைவி ஆவார். கடந்த 01.02.2024 ம் தேதி சுமார் மாலை 06.00 மணியளவில் நானும் எனது மனைவியும் வீட்டு வாசலில் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அ.சா.1 வயலில் புல் அறுத்து கொண்டு வலது பக்கத்திலிருந்து இடது பக்கத்திற்கு மெயின்ரோட்டை கடந்து எனது வீட்டு அருகே வந்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி அவரது இருசக்கர வாகனமான Hero Honda வண்டியை ஆரன் அடிக்காமல் வேகமாக ஓட்டி வந்து அ.சா.1 ன் மீது மோதினார். அவ்வாறு மோதியதில் அ.சா.1 க்கு இடதுபக்க காலின் பாதத்தில் காயம் ஏற்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டது. நான் உடனே அ.சா.1 ன் மகனான ராகவனுக்கு தகவல் தெரிவித்தேன். அவர் அ.சா.1 ஐ முதலில் குடவாசல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அதன் பின்னிட்டு திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து நடந்தநேரம் இருட்டும் நேரம் என்றால் நல்ல வெளிச்சமாக தான் இருந்தது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் வாகனங்கள் செல்லும் இடம் என்றால் சரிதான். தெரு மின் விளக்குகள் எரிந்து கொண்டிருந்ததா என்றால் எரிந்து கொண்டிருந்தது. நொடிப்பொழுதில் மேற்படி சம்பவம்நடந்து முடிந்து விட்டது என்றால் சரிதான். எனது மனைவி வீட்டிற்குள் வேலையாக இருந்தாரா என்றால் ஆமாம் நான் கூப்பிட்டவுடன் வந்து பார்த்தார். எத்தனை நபர்கள் மேற்படி சம்பவத்தை பார்த்தார்கள் என்றால் சுமார் 20 நபர்கள் பார்த்திருப்பார்கள். பில்லு கட்டை தலையில் வைத்து அ.சா.1 சாலையில் கடக்கவில்லை என்றால் மேற்படி சம்பவம் நடைபெற வாய்ப்பில்லை என்றால் சம்பவம் நடந்தபோது அ.சா.1 சாலையை கடந்து வந்து விட்டார். அ.சா.1 சாலை விதிமுறைகளை பின்பற்றாமல் சாலையை கடக்க முயன்று மேற்படி விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. காயம்பட்ட நபர் எனது தம்பி மனைவி என்பதாலும் அவருக்கு வாகன விபத்து நஷ்ட ஈடு கிடைக்கவேண்டும் என்பதற்காக உண்மை சம்பவத்தை மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு ஏற்பபட்ட காயத்திற்கு எதிரி பொறுப்பானவரோ காரணமோ இல்லை என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.17 12:28:36 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`